DINAMANI (10/12/14)

கைப்பேசிகளை நூலகங்களுடன் ஒருங்கிணைக்க வேண்டும்

அப்துல் கலாம் வலியுறுத்தல்

புதுச்சேரியில் செவ்வாய்க்கிழமை தொடங்கிய தேசிய நூலக மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசும் குடியரசு முன்னாள் தலைவர் அப்துல் கலாம். (வலது) விழாவில் பங்கேற்றோர்.

புதுச்சேரி, டிச. 9: தற்போதைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில், கைப்பேசிகளை நூலகங்களுடன் ஒருங்கிணைக்கும் வசதியை ஏற்படுத்த வேண்டும் என குடியரசு முன்னாள் தலைவர் அப்துல் கலாம் வலியுறுத்தினார்.

புது தில்லி டெல்நெட், புதுச்சேரி பிரெஞ்ச் ஆய்வு நிறுவனம் சார்பில் 17-வது தேசிய நூலக மாநாடு, புதுச்சேரியில் செவ்வாய்க்கிழமை தொடங்கியது. 'அறிவு வளர்ச்சி, நூலகவியல் மற்றும் தகவல் கட்டமைப்பு' எனும் தலைப்பிலான இந்த மாநாடு (நேக்லின் 2014), ஆனந்தா இன் ஓட்டல் கூட்டரங்கில் மூன்று நாள்கள் நடத்தப்படுகிறது.

மாநாட்டை தொடங்கி வைத்து அப்துல் கலாம் பேசியது:

புதுச்சேரி ஆன்மிகத்துக்கும், கல்விக்கும் பெயர் பெற்ற இடமாக உள்ளது.

நூல்கள்தான் ஒருவரது வாழ்வில் சிறந்த வழிகாட்டியாகவும், நண்பனாகவும் விளங்குகின்றன. கடந்த 1950ஆம் ஆண்டுகளில் நான் பயிலும் போது, மூர்மார்க்கெட் பகுதிதான் எனக்கு மிகவும் பிடித்த இடமாக விளங்கியது. ஏனென்றால் அங்கு அதிகளவில் புத்தகங்களை வாங்க முடியும். அதில் வாங்கிப் படித்த புத்தகங்கள் எனது வாழ்வில் உந்து சக்தியாக விளங்கின.

கைப்பேசிகளுடன் நூலகங்கள் இணைப்பு: தற்போது நவீன தகவல் தொழில்நுட்பம் பெருகிவிட்டது. அனைவரும் தங்கள் கைப்பேசிகள் மூலமே தேவையான தகவல்களை அறிந்து கொள்கின்றனர். இந்தியாவில் தற்போது 80 கோடி பேர் கைப்பேசிகளை பயன்படுத்துகின்றனர். எனவே கைப்பேசிகளுடன், நூலகங்களை ஒருங்கிணைத்து அதன் மூலம் நூல்களை படிக்கும் தொழில் நுட்ப வசதியை ஏற்படுத்த வேண்டும். அனைத்து நூல்களையும் மொழிமாற்ற வசதியுடன் படிக்கும் வகையில் தொழில்நுட்பத்தை கைப்பேசிகளில் ஏற்படுத்த வேண்டும்.

மேலும் மாற்றுத் திறனாளிகளும் பயன்பெறும் வகையில் நூல்களை குரல் வசதியுடன் பயிலும் தொழில்நுட்பத்தையும் ஏற்படுத்த வேண்டும். இதனால் அதிநவீன யுகத்திலும் நூல்களை வாசிக்கும் பழக்கம் குறையாமல் இருக்கும். அறிவுச்சுரங்கங்களாகத் திகழும் புத்தகங்களை அனைவரும் வாசிக்க ஏதுவாகும். தற்போதைய காலக்கட்டத்துக்கு ஏற்ப அனைத்து நூலகங்களையும் கணினி மயமாக்கி, டிஜிட்டல் மயமாக்குவது அவசியம்.

வீடுகள் தோறும் நூலகம்: மாணவ, மாணவியரிடையே வாசிக்கும் பழக்கத்தை மேலும் ஊக்கப்படுத்த வேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் தங்களது வீடுகளில் 20 முதல் 30 நூல்களைக் கொண்ட சிறிய நூலகங்களை ஏற்படுத்த வேண்டும். அதில் குறைந்தது 10 குழந்தைகள் நூல்களாவது இருக்க வேண்டும்.

நாள்தோறும் குடும்ப உறுப்பினர்கள் ஒரு மணி நேரம் நூல்களை வாசித்து அதன் பொருள் குறித்து விவாதிக்க வேண்டும். இதன் மூலம் குடும்பத்தில் அனைவரது அறிவும் பெருகும்.

இணக்கமான சூழ்நிலையும் ஏற்படும். பெற்றோர் நூல்களை வாசித்தால் தானாகவே குழந்தைகளும் சிறிய வயதிலேயே வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்வர்.

வீட்டில் அமைக்கப்படும் ஒரு நூலகம் தான் அக்குடும்பத்தின் சிறந்த சொத்தாகும். இதன் மூலம் அவர்கள் வருங்காலத்தில் சிறந்த தலைவராகவோ, விஞ்ஞானியாகவோ, கல்வியாளராகவோ, பொறியாளராகவோ, விளங்குவர்.

திருக்குறளுக்கு ஈடு இல்லை: 2,200 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட திருக்குறளுக்கு ஈடு இணை ஏதுமில்லை. அதை இயற்றிய வள்ளுவர் உலகின் அனைத்து வகையான விஷயங்கள் குறித்தும் இரு வரிகளில் தெளிவாக விளக்கி உள்ளார். ஒரு எழுத்தாளருக்கான வழிகாட்டியாக திருக்குறள் உள்ளது என்றார் அப்துல்கலாம்.

உதவிப் பேராசிரியரான கார் ஓட்டுநர்

தேசிய நூலக மாநாட்டில் பேசிய அப்துல் கலாம் ஹைதராபாத்தில் தனது கார் ஓட்டுநராக இருந்து, உதவிப் பேராசிரியராக மாறிய கதிரேசனை நினைவு கூர்ந்தார்.

'மதுரையில் கடந்த 2011-ம் ஆண்டு மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு தொடக்க விழாவுக்கு சென்றிருந்தேன். அப்போது ஹைதராபாத்தில் நான் பணிபுரிந்த போது எனக்கு கார் ஓட்டுநராக பணியாற்றிய கதிரேசன் என் அருகே வந்தார்.

நான் ஆய்வகத்துக்கு சென்று விடும் போது, அவர் பல்வேறு புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் கொண்டிருந்தார். அவரது ஆர்வம் என்னைக் கவர்ந்தது. இது குறித்து கேட்டபோது, தனது குழந்தைகள் கேட்கும் சந்தேகங்களுக்கு பதில் கூறுவதற்காக படிப்பதாகக் கூறினார்.

இதையடுத்து அவரை அஞ்சல் வழிக்கல்வி மூலம் படிக்குமாறு கூறினேன்.

பி.ஏ. வரலாறு, பின்னர் எம்.ஏ., பிஎட், எம்.எட். படித்து முடித்த அவர் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி. படிப்பை முடித்தார்.

பின்னர் மேலூர் அரசுக் கல்லூரியில் உதவிப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார்.

ஒருவரது அர்ப்பணிப்பு உணர்வும், நோக்கமும் எதையும் சாதிக்க உதவும் என்பதற்கு அவர் ஓர் எடுத்துக்காட்டு' என்றார்.

பாலம் கல்யாணசுந்தரத்தை கௌரவித்த கலாம்

புதுச்சேரி, டிச. 9: ஆயிரம் ஆண்டுகளில் சிறந்த மனிதர் விருது பெற்ற பாலம் கல்யாணசுந்தரத்தை முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் செவ்வாய்க்கிழமை கௌரவித்தார்.

திருநெல்வேலி மாவட்டம் களக்காடு பகுதியைச் சேர்ந்த பாலம் கல்யாணசுந்தரம், 35 ஆண்டுகளாக பேராசிரியர் பதவி வகித்தவர். இவர் தான் பெற்ற மொத்த மாத ஊதியத்தையும் ஏழை மக்களின் நலனுக்காகவே செலவிட்டார்.

இவரது சேவையைப் பாராட்டி அமெரிக்காவில் ஆயிரம் ஆண்டுகளில் சிறந்த மனிதர் (Man of Millenieum) விருதும், ரூ.30 கோடி பரிசுத் தொகையும் வழங்கப்பட்டது. அதையும் குழந்தைகள் நலனுக்காக அளித்து அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றார்.

இவர் செவ்வாய்க்கிழமை புதுச்சேரியில் நடந்த 17-வது தேசிய நூலக மாநாட்டுக்கு வந்திருந்தார்.

பார்வையாளர் வரிசையில் அமர்ந்திருந்த அவரை நேரில் அழைத்த அப்துல் கலாம், தனக்கு மாநாட்டில் வழங்கிய பூங்கொத்தை வழங்கி அவரைக் கௌரவித்தார்.